

NHS England



# பெண்களுக்கும், வால்ப்ரோயேட் உட்கொள்ளும் நபர்களுக்குமான மருத்துவ மதிப்புரைகள் பற்றிய தகவல் துண்டுப்பிரசுரம்









Tamil




# இந்த துண்டுப்பிரசுரம் எதைப் பற்றியது?


இந்த துண்டுப்பிரசுரம் 55 வயதிற்குட்பட்ட எவருக்கும் வால்ப்ரோயேட் உட்கொள்வதால் ஏற்படும் பலன்கள் மற்றும் அபாயங்களைப் பற்றியது. வால்ப்ரோயேட்டைத் தொடங்குவது அல்லது எடுத்துக்கொள்வது பற்றி உங்கள் நிபுணரிடம் பேசுவதற்கு இது உதவுகிறது. வால்ப்ரோயேட் சில நேரங்களில் எபிலிம் அல்லது டெபாகோட் என்று அழைக்கப்படுகிறது. வால்ப்ரோயேட் என்பது வால்-ப்ரோ-யேட் என உச்சரிக்கப்படுகிறது.





கால்-கை வலிப்பு (வலிப்புத்தாக்கங்கள் அல்லது வலிப்பு) அல்லது இருமுனைக் கோளாறு மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளுக்கு வால்ப்ரோயேட் மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம். பொதுப்படையான வலிப்பு அல்லது வலிப்புத்தாக்கங்களைக் குறைக்க இதுவே சிறந்த மருந்தாகும்.





நீங்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் பாதுகாப்பாக இருப்பதற்கும் சிறந்த மருந்தைப் பற்றி உங்கள் நிபுணர் உங்களுக்குச் சொல்வார். சில சமயங்களில் சிலர் வலிப்புத்தாக்கங்கள் அல்லது வலிப்பால் மிகவும் நோயுறலாம், சிலர் திடீரென இறக்க நேரிடலாம் (கால்-கை வலிப்பில் திடீர் எதிர்பாராத மரணம் (SUDEP) எனப்படுகிறது).




உங்கள் நிபுணர் உங்களுடனும், உங்கள் பராமரிப்பாளர்கள், குடும்பத்தினர் அல்லது வழக்கறிஞருடனும் உங்கள் வால்ப்ரோயேட் மருந்தின் பலன்கள் மற்றும் அபாயங்கள் பற்றி பேசுவார். SUDEP மற்றும் உங்கள் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் மற்ற அபாயங்களைப் பற்றி அவர் விளக்குவார்.





நீங்கள் கர்ப்பமாக இருக்கும்போது வால்ப்ரோயேட்டை எடுத்துக் கொண்டால் அது உங்கள் குழந்தைக்கு உடல்நலப் பிரச்சினைகளை விளைவிக்கலாம்.




வால்ப்ரோயேட், குழந்தையின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியைப் பாதிக்கலாம். குழந்தையின் மூளை எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்பதில் சிக்கல் ஏற்பட 30-40% வாய்ப்பு இருக்கலாம்.

அதாவது, அவர்களுக்கு கற்றல் குறைபாடு அல்லது ஆட்டிசம் இருப்பதை அல்லது கவனம் செலுத்தவோ அமைதியாக உட்காரவோ முடியாதிருப்பதை (ADHD) அர்த்தப்படுத்துகிறது.



## எனது வால்ப்ரோயேட் மருந்தை நான் ஏன் மீளாய்வு செய்ய வேண்டும்?


நீங்கள் வால்ப்ரோயேட் எடுத்துக் கொண்டால் அது குழந்தைகளுக்கு உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். நீங்கள் 55 வயதிற்குட்பட்டவராக இருந்தால், ஒவ்வொரு வருடமும் உங்கள் நிபுணரைச் சந்திக்கும்படி கேட்கப்படுவீர்கள். இது மருந்து மீளாய்வு என்று அழைக்கப்படுகிறது.



உங்களிடம் ஹெல்த்கேர் பாஸ்போர்ட் இருந்தால், அதை உங்கள் நிபுணரிடம் காட்டவும். அவர் உங்களை ஆதரிக்க அது உதவும்.




உங்கள் மருந்து பற்றிய எந்த முடிவும் உங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும். உங்கள் குடும்ப உறுப்பினர், பராமரிப்பாளர், நண்பர், வழக்கறிஞர் அல்லது உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த உங்களுக்கு உதவக்கூடியவர் போன்ற எவரேனும் உங்கள் நிபுணருடனான சந்திப்புகளில் உங்களுடன் இருக்கலாம்.



உங்கள் கருத்து மிக முக்கியமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதுவேனும் புரியவில்லை என்றால் எப்போதும் கேட்டுப் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் உடல் மற்றும் வாழ்க்கை தொடர்பான முடிவுகளில் நீங்கள் உள்ளடக்கப்படுவதாக உங்களுக்குத் தோன்றவில்லை என்றால் சொல்லுங்கள்.





நீங்கள் குழந்தை பெறத் திட்டமிட்டுள்ளீர்களா அல்லது நீங்கள் கர்ப்பமடைய மாட்டீர்களா என்று உங்கள் நிபுணர் கேட்பார். வால்ப்ரோயேட் உங்களுக்கு இன்னும் சிறந்த மருந்தா என்பதை அவர் சோதிப்பார். நிபுணருடன் வருடாந்திர இடர் ஒப்புகைப் படிவத்தை (Annual Risk Acknowledgement Form, ARAF) பூர்த்தி செய்யும்படி கேட்கப்படுவீர்கள். ARAF-இன் ஒரு நகல் உங்களுக்கு வழங்கப்படும்.



## நான் கர்ப்பமாவேன் என்று நினைக்கவில்லை

நீங்கள் கர்ப்பமடைவீர்கள் என்று நீங்களும் நிபுணரும் கருதவில்லை என்றால், அவர் அதை ARAF-இல் காரணத்துடன் எழுதுவார்.


# நான் கர்ப்பமடையக்கூடும்



நீங்கள் கர்ப்பமடையக்கூடும் என்று நீங்களும் உங்கள் நிபுணரும் கருதினால், அவர் ஒவ்வொரு வருடமும் உங்களைச் சந்திப்பார். உங்கள் கால்-கை வலிப்பு அல்லது இருமுனைக் கோளாறு பற்றி நீங்கள் கலந்துரையாடுவீர்கள் மற்றும் வால்ப்ரோயேட் உங்களுக்கு இன்னும் சிறந்த மருந்தாக இருப்பதைச் சோதிப்பீர்கள். நீங்கள் அதை எடுக்க ஒப்புக்கொள்வதை அவர் சரிபார்ப்பார்.





நீங்கள் 55 வயதிற்குட்பட்டவராகவும், கர்ப்பமடைய வாய்ப்புள்ளவராகவும் இருந்தால், இது உங்களுக்கான சிறந்த மருந்து என்று இரண்டு நிபுணர்கள் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் வால்ப்ரோயேட் பயன்படுத்தப்படலாம். காயில் அல்லது கருத்தடை உள்வைப்பு போன்ற கருத்தடை முறைகளை நீங்கள் பரிசீலிக்க வேண்டியிருக்கும். உங்களுக்கான விருப்பத்தேர்வுகளைப் பற்றி நீங்கள் ஆலோசனை கேட்கலாம்.




நீங்கள் கர்ப்பமடைய வாய்ப்புள்ளது என்றால், வால்ப்ரோயேட் போன்று உங்களுக்குச் சிறந்த வேறு மருந்து இருக்கிறதா என்று உங்கள் நிபுணர் உங்களுடன் கலந்துரையாடுவார்.





வால்ப்ரோயேட்டில் இருந்து சிறப்பாகச் செயல்படாத மருந்துக்கு மாறுவது அல்லது அதை விரைவாக மாற்றுவது உங்கள் வலிப்புத்தாக்கங்களை அல்லது உடல்நலப் பிரச்சினைகளை மோசமாக்கலாம். சிலர் மருத்துவமனைக்குச் செல்ல நேரிடலாம், சிலர் இறக்கக்கூடும்.



# நான் கர்ப்பமடையத் திட்டமிடுவது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன்


நீங்கள் கர்ப்பமடையத் திட்டமிடுகிறீர்கள் என்றால், உங்கள் மருத்துவரிடம் பேசுவது மிகவும் முக்கியம். நீங்கள் கர்ப்பமாவதற்கு முன் உங்களுக்கோ, உங்கள் குழந்தைக்கோ ஏற்படும் அபாயம் எதையும் குறைக்க, முடிந்த அனைத்தையும் செய்வதற்கு அவரால் உங்களுக்கு உதவ முடியும்.



நீங்கள் கர்ப்பமாகிவிட்டால், உங்கள் மருத்துவரிடம் மிக விரைவில் தெரிவிக்க வேண்டும். உங்கள் நிபுணரிடம் பேசாமல் உங்கள் வால்ப்ரோயேட் மருந்தை உட்கொள்வதை நிறுத்தாமல் இருப்பது முக்கியம், ஏனெனில் அச்செயல் ஆபத்தானது.



நீங்கள் கர்ப்பமாகி, வலிப்புத்தாக்கங்கள் அல்லது வலிப்பு இருந்தால், முடிந்தவரை இவற்றை நிறுத்துவது முக்கியம். அளவுக்கதிகமான வலிப்புத்தாக்கங்களானது குழந்தைகளின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியைப் பாதிக்கலாம். சில நேரங்களில் வலிப்பு மற்றும் SUDEP (கால்-கை வலிப்பில் திடீர் எதிர்பாராத மரணம்) காரணமாக பெண்களும் கருவிலுள்ள குழந்தைகளும் இறக்கின்றனர்.



வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட பல பெண்களுக்கு கர்ப்பம் சரியானதாகவே இருக்கும், ஆனால் அது பாதுகாப்பற்ற நேரமாக இருக்கலாம். சில பெண்கள், தத்தெடுத்தல் போன்றவற்றின் மூலம் கர்ப்பமடையாமலேயே தாயாகிறார்கள்.




## மேலதிகத் தகவல்

இந்தத் துண்டுப்பிரசுரத்தின் PDF-ஐ நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம், மேலும் தெரிந்துகொள்ள பாருங்கள்:

**southeastclinicalnetworks.nhs.uk/valproate**



உங்கள் ஃபோனின் கேமரா மூலம் **இந்த QR குறியீட்டை ஸ்கேன்** செய்யலாம்.

இந்தத் துண்டுப்பிரசுரம் பல்வேறு மொழிகளிலும் பதிவிறக்கம் செய்யக் கிடைக்கிறது.


## ஒப்புகை

இந்தத் துண்டுப்பிரசுரத்திற்குப் பங்களித்த, வலிப்புத்தாக்கம் மற்றும் மனநல நிலைமைகள் என இரண்டிலும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களுடன், தென்கிழக்கு மண்டலத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள அனைத்து மருத்துவர்களுக்கும் நன்றி.

எங்களுடன் இணைந்து துண்டுப்பிரசுரத்தை வடிவமைத்துள்ள Active Prospects, ProActive சமூக உறுப்பினர்கள், SUDEP Action, My Life My Choice ஆகியோரின் உள்ளீட்டிற்கு நாங்கள் குறிப்பாக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

‘Easy-on-the-i’ images copyright © Leeds and York Partnership NHS Foundation Trust.

CS57039 NHS Creative 2024